# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2367/24 - 2024 ජනවාරි මස 19 වැනි සිකුරාදා - 2024.01.19

*2367/24 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: GCF/ATH/DL/40/LR.
காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2005/LRB/263.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

(பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், அத்திடிய வாவி வீதியின் வடிகால் முறையை அபிவிருத்தி செய்வதற்கான காணியை அரசுக்கு எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவில், அத்திடிய கிராம அலுவலர் பிரிவில், அத்திடிய கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2013.07.04 ஆந் திகதிய கொ: 9366 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட 0.0147 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டின் விபரங்கள் :

*01.* **துண்டு இல. 1**
காணியின் பெயர் : அத்திடிய வயல்வெளி; விபரம் : சீமெந்து வடிகால்; உரிமை கோருவோர் : அரசு; விஸ்தீரணம் : 0.0147 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டிற்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட

காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும், 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்
மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்,
தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவு.

பாரிய கொழும்பு வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல் மற்றும்
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின்
காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய,
2024, சனவரி 16.

EOG 01 - 0180